Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.II. TIRUPATTUR
Case No CC.NO. 104/2024, Cr.No.248/2024, Kurisilapet PS
DEPOSITION OF PROSECUTION SIDE EVIDENCE No.3, Page.No.

| | |
|---|---|
| **பெயர்** | மலர் |
| **வயது** | 45 |
| **தந்தை/கணவர் பெயர்** | ராமு |
| **கிராமம்** | சிலம்புநகர் |
| **மாவட்டம்** | திருப்பத்தூர் |
| **தொழில்** | விவசாயம். |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 ) on the 08th day of October 2025.

**சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.**

**<u>முதல் விசாரணை</u> (1, 2 எதிரிகள் ஆஜர். 3, 4 எதிரிகள் மனுவின் பேரில் ஆஜரில்லை)**

நான் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். வேல்முருகன் என்னுடைய மகனாவார். கடந்த ஆண்டு ஜூன் மாதத்தில் குரும்பட்டியில் திருவிழா நடந்து கொண்டிருந்த போது பூவரசன் மற்றும் வேல்முருகன் ஆகியோர் டிரம்ஸ் அடிக்கும்போது நடனமாட சென்றிருந்தனர். அப்போது குரும்பட்டியிலுள்ள பெயர் தெரியாத பார்த்தால் அடையாளம் காட்டக்கூடிய 4 பேர் வெளியூர் ஆட்கள் இங்கு நடனமாடக்கூடாது என்று அவர்களை மிரட்டினார்கள். பின்னர் இரவு 07.00 மணியளவில் வீட்டிற்கு செல்வதற்காக பூவரசனும் வேல்முருகனும் திரும்ப வந்துகொண்டிருந்தபோது அவர்களுக்கு பின்னாலேயே வந்து குரும்பட்டி சுடுகாட்டிடம் அந்த 4 பேரும் வேல்முருகனை கல்லால் தலையில் அடித்தனர். அதனால் அவர் மயக்கமடைந்து கீழே விழுந்துவிட்டார். மேலும் அவர்களிடம் உள்ள கத்தியால் வேல்முருகனின் தலையில் கொத்தியதால் அவருக்கு தலையில் காயம் ஏற்பட்டதால் மயக்கமடைந்தார். அருகிலிருந்த நானும் பலராமன் என்பவரும் இதை நேரடியாகப் பார்த்தோம். நாங்கள் செல்வதற்குள் அவர்கள் ஓடிவிட்டனர். பின்னர் நாங்கள் வேல்முருகனை இருசக்கரவாகனத்தில் கொண்டு செல்லும் வழியில் ஆம்புலன்ஸ் வந்ததால் அதன் மூலம் திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில்

சிகிச்சைக்காக சேர்த்தோம். மருத்துவமனையில் என்னுடைய மகன் 5 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சையிலிருந்தார். எனது மகனுக்கு அதிகப்படியான காயம் ஏற்பட்டடதால் தற்போதும் தலைசுற்றல் ஏற்படுகிறது. என்னை போலீசார் விசாரித்தனர்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :–</u>**

பூவரசன் என்பவர் என் மகனின் நண்பர் என்றால் சரிதான். என் சொந்த ஊர் சிலம்புநகர். குரும்பட்டிக்கும் எனது ஊருக்கும் 1 கி.மீ இருக்கும். எனது மகனையும் பூவரசனையும் நடனமாட யார் அழைத்தார்கள் என்று எனக்கு தெரியாது. அவர்கள் இருவரும் மது அருந்திவிட்டு இருந்தார்கள் என்றால் சரியல்ல. குரும்பட்டியைச் சார்ந்த சுமார் 20 பேர் அங்கு நடனமாடக் கூடாது என்று கூறியும் இவர்கள் இருவரும் பிரச்சனை செய்தார்கள் என்றால் சரியல்ல. இவர்கள் இருவரும் குரும்பட்டியைச் சார்ந்தவர்களை அசிங்கமாகத் திட்டி காயம் ஏற்படுத்தினார்கள் என்றால் சரியல்ல. எனது மகனுக்கு காயம் ஏற்பட்டது எனக்கு எப்படி தெரியும் என்றால் நான் நேரடியாகப் பார்த்தேன். எனது மகனுக்கு இரவு 07.00 மணியளவில் காயம் ஏற்பட்டது. போலீசார் விசாரணையில் எதிரிகள் தலையில் கத்தியால் கொத்தியதாகவும் கன்னத்தில் அடித்ததாகவும் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். போலீசார் விசாரணையில் நான் சம்பவத்தை நேரடியாகப் பார்க்கவில்லை என்று கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. என் மகன் குடிபோதையில் கீழே விழுந்ததால் தான் சிறாய்ப்பு காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. எதிரிகள் என் மகனை கத்தியால் தாக்கியதை நான் நேரடியாகப்பார்த்தேன். என் மகனுக்கு தலையிலும் கன்னத்திலும் காயம் இல்லை என்றால் சரியல்ல. என் மகன் அளித்த பொய் புகாருக்கு இணங்க நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

**<u>மறுவிசாரணை :– இல்லை</u>**

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

KOVENDHAN S

JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: TIRUPATHUR
Date: 2025.10.08 20:17:45 +0530

Judicial Magistrate No.II,
Tirupathur.